### ஆடிப்பெருக்கு நாளன்றுகூட அகண்ட காவிரி, வறண்ட காவிரியானது!

# சோறு போடும் விவசாயிகள் கண்ணீரில் மிதப்பதால் 'ரீல்ஸ்' போடும் முதலமைச்சருக்கு எதிராக முழக்கங்கள்!

## தஞ்சை ஆர்ப்பாட்டம் குறித்து சட்டப் பேரவை எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

சென்னை, ஆக.4

ஆடிப்பெருக்கு நாளன்று கூட அகண்ட காவிரி வறண்ட காவிரியாக காட்சி அளிக்கிறது என்றும், சோறு போடும் விவசாயிகள் கண்ணீர் மிதக்கும்போது கூட Reels போடும் முதலமைச்சருக்கு எதிராக முழக்கங்களை எழுப்பினோம் என்று தஞ்சையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தை சுட்டிக்காட்டி சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் சமூக வலைதளப்பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப்பதிவு வருமாறு:-

**அலட்சியத்தோடும் ஆணவத்தோடும் விவசாயிகளை வஞ்சிக்கும் த.வெ.க. அரசைக் கண்டித்து, கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதல்படி, கழக உடன்பிறப்புகள் தோழமை இயக்கத்தினர் விவசாய சங்க பிரதிநிதிகளுடன் இணைந்து தஞ்சை மாநகரில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தை இன்று நடத்தினோம்.**

**ஆடிப்பெருக்கு நாளன்று கூட**




**அகண்ட காவிரி, வறண்ட காவிரியாக காட்சி அளிப்பதற்கு இந்த Dummy ஆட்சியாளர்களே காரணம்.**

**சோறு போடும் விவசாயிகள் கண்ணீரில் மிதக்கும்போது Reels போடும் முதலமைச்சருக்கு எதிராக முழக்கங்களை எழுப்பினோம்.**

**விவசாயக் கடனை முழுமையாக ரத்து செய்ய வேண்டும்,**

**மேகதாது அணை கட்டும் கர்நாடக அரசின் முயற்சியைத் தடுக்க வேண்டும்,**

**டெல்டா மாவட்டங்களை வறட்சி பாதித்த மாவட்டங்களாக அறிவிக்க வேண்டும் ஆகிய கோரிக்கைகளை இந்த முதலமைச்சர் உடனே நிறைவேற்ற வேண்டும் என உரையாற்றினோம்.**

**சட்டமன்றம் - நீதிமன்றம் - மக்கள் மன்றம் என அனைத்து இடங்களிலும் விவசாயிகள் பிரச்சினைகளுக்காக தி.மு.கழகத்தின் குரல் என்றைக்கும் ஒலிக்கும்! விவசாய விரோதி விஜய்.**

இவ்வாறு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் தனது சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

---

### காவிரியில் குறித்த காலத்தில் தண்ணீர் திறக்காததால்

# குறுவை சாகுபடி கேள்விக்குறி : பா.ஜ.க. - காங்கிரஸ் - த.வெ.க. - மூவரும் சேர்ந்து தமிழர்களுக்கு துரோகம்!

## தி.மு.க. ஐ.டி.விங் குற்றச்சாட்டு!

சென்னை, ஆக 4-

ஜூன் 12ல் மேட்டூர் அணை திறக்கப்பட்டு, ஜூலை 23க்குள் காவிரி நீர் கடைமடைப் பகுதிகளைச் சென்றடைந்தால் மட்டுமே குறுவைச் சாகுபடி முழுமையான பலனைத் தரும். குறுவை பயிரின் ஆயுட்காலம் சுமார் 100 முதல் 120 நாட்கள்.

ஜூலை 23க்குள் கடைமடைக்குத் தண்ணீர் வந்தால் தான் ஆகஸ்ட் முதல் வாரத்திற்குள் நாற்று நட்டு முடிக்க முடியும். மேற்சொன்னபடி நடந்தால் தான் அக்டோபர் மாத நடுப்பகுதியில் வடகிழக்கு பருவ மழை தீவிரமடைவதற்கு முன்பாக அறுவடையை நிறைவு செய்ய முடியும்.

இப்போதுவரை காவிரி கடைமடைக்கு நீர் வரவில்லை. அதனால் குறுவை தாமதமாகும். குறுவை தாமதமானால், அடுத்து வரக்கூடிய முதன்மைச் சாகுபடியான சம்பா சாகுபடி காலமும் தள்ளிப்போய், ஒட்டு மொத்த சுழற்சியும் பாதகமாகும்.

ஜூன் 19, 2026 தீர்மானம் தமிழ்நாடு சட்டமன்றத்தில் நிறைவேற்றினார்கள். எதிர்கட்சித் தலைவர் எல்லா கட்சி உறுப்பினர்களும் ஒன்றாகச் சேர்ந்து நேரில் சென்று ஒன்றிய அரசை வலியுறுத்துவோம் என்றார் பயனில்லை.

இதுவரை நீர்வளத்துறை அமைச்சராக இருக்கக்கூடிய புஸி ஆனந்த் பத்திரிகையாளர்களைச் சந்தித்து இதுகுறித்து பார்த்துக்கூட படித்து விளக்கம் சொல்லவில்லை.

காவிரி நடுவர் மன்றம் சொல்லியும் கர்நாடகா முதலமைச்சர் நீரைத் திறக்கவில்லை. மழை பெய்வதால் திறந்துவிட்டுள்ளார். அதுவும் சம்பா பயிரிடும் காலம் கடந்த பின்பு.

இங்கே வந்த ராகுல் காந்தி அதைப் பற்றி வாயைக்கூட திறக்கவில்லை. அவர் கட்சியைச் சார்ந்த சிவகுமாருக்கு அழுத்தம் கூட தரவில்லை.

தண்ணீர் தர வேண்டிய கர்நாடகா மாநிலத்தில் அனைத்துக் கட்சிக் கூட்டம் நடத்துகின்றனர்.தண்ணீர் தர கூடாது என்ற தீர்மானமாக இருக்கின்றனர்.

தமிழ்நாட்டின் மாண்புமிகு முதலமைச்சர் இதைப்பற்றியே அக்கறை இல்லாமல் இருக்கிறார். அனைத்துக் கட்சி கூட்டம் கூட்டினால் தமிழ்நாடு ஒரு மனதாக ஒரு நிலைப்பாட்டை எடுக்கலாம். அதற்கும் வழியில்லை.

ஒன்றிய நீர்வளத் துறை (ஜல் சக்தி) அமைச்சராகவோ / துணை அமைச்சராகவோ அல்லது அதன் முக்கியக் பொறுப்பிலோ கர்நாடகாவைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் நியமிக்கப்படும்போது, அது காவிரி மற்றும் மேகதாது விவகாரங்களில் நடுநிலைத்தன்மையைப் பாதிக்கும்.

ஆனால் பாஜக ஜல் சக்தி துறையின் துணை அமைச்சராக வி. சோமண்ணா கர்நாடகா மாநிலத்தை சார்ந்தவருக்கு இந்த பொறுப்பை வழங்கியுள்ளது .

தமிழ்நாட்டிற்கு வந்தால் திருகுறள் சொன்னால் போதும் என பிரதமர் மோடி நினைக்கிறார். கடந்த வாரம் கர்நாடக முதலமைச்சர் சிவகுமார் உடன் மேடையை பகிர்ந்து கொண்ட மோடி அவர்கள் காவிரி நீர் விவகாரத்தில் நடுவர் மன்றத்தின் உத்தரவை மதிக்க வேண்டும் என்று கூட சொல்லவில்லை. தமிழ்நாடு மீது இரண்டு தேசிய கட்சிகளுக்கும் அக்கறை என்பதை விட கருணை கூட இல்லை.

ஆக பாஜக, காங்கிரஸ் , தவெக மூவரும் சேர்ந்து தமிழர்களுக்கு துரோகம் இழைத்துவிட்டனர்.

விவசாய விரோதி விஜய் இவ்வாறு தி.மு.க. ஐ.டி. விங் தெரிவித்துள்ளது.

---

### திருவள்ளூர் மாவட்டம்

# பொன்னேரியில் திராவிட வட்டம் - கலந்துரையாடல் கூட்டம்!

## மாணவரணி விக்னேஷ் உதயன் ஒருங்கிணைத்தார்!

திருவள்ளூர், ஆக.4-

தமிழ் மாணவர் மன்றம் சார்பில் திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரியில் திராவிட வட்டம் என்ற தலைப்பில் மாணவர்கள், இளைஞர்கள் சந்திப்பு மற்றும் கலந்துரையாடல் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் திராவிட இயக்கத்தின் மீது பற்று கொண்ட இளைஞர்கள் பலர் கலந்துகொண்டு தி.மு.க. ஆட்சியின் சாதனைகள் பற்றியும், தி.மு. கழகத்தால் தாங்கள் அடைந்த பயன்கள் மற்றும் சமூக மாற்றங்கள் பற்றியும் விரிவாக கலந்துரையாடினர்.

தொடர்ந்து தங்கள் பகுதிகளில் இனிவரும் காலங்களில் மாதாமாதம் திராவிட வட்ட நிகழ்ச்சி நடைபெறும் என்றும் மாணவர்கள் தெரிவித்தனர். மாநில உரிமைகளுக்காக மொழி உரிமைகளுக்காக, கல்வி உரிமைக்காக போராடும் திமுகவுடன் என்றும் மாணவர் சக்தி துணை நிற்கும் என்று இக் கூட்டத்தில் தீர்மானம் நிறை வேற்றப்பட்டது.

இந்த நிகழ்ச்சி மாநில மாணவரணி செயலாளர் வீரமணி ஜெயக்குமார் அவர்களின் வழிகாட்டுதலின்படி, திருவள்ளூர் கிழக்கு மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் விக்னேஷ் உதயன் ஒருங்கிணைப்பில் நடைபெற்றது,

இதில் சிவில் சர்வீஸ் தேர்வு பயிற்சியாளர் மு. முத்துக்குமார் மற்றும் கழக இளம் பேச்சாளர் ஜெ. பாலச்சந்தர் உள்ளிட்டோர் கலந்து கொண்டு மாணவர்கள் மத்தியில் கலந்துரையாடினர். நிகழ்ச்சியில் மாணவரணி தோழர்கள் டி.ஜெ. தமிழரசன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்,

நிகழ்ச்சியில் கலந்து கொண்ட மாணவர்களுக்கு பாராட்டு சான்றிதழ் தமிழ் மாணவர் மன்றம் சார்பில் வழங்கப்பட்டது.

---

### சென்னை மேற்கு மாவட்டம்

# அண்ணா நகர் தெற்குப் பகுதி, 106வது வட்டக் கழகப் பொறுப்பாளர் நியமனம்!

## தலைமைக் கழக அறிவிப்பு!

சென்னை மேற்கு மாவட்டம், அண்ணா நகர் தெற்கு பகுதி, 106வது வட்டக் கழகச் செயலாளர் ப.மகேஷ்ராஜா அவர்கள் மறைவெய்திய காரணத்தால், திரு.வெ.சண்முகம் (21, ஓ-பிளாக், பகத்சிங் இரண்டாவது தெரு, எம்.எம்.டி.ஏ.காலனி, அரும்பாக்கம், சென்னை-600106.) அவர்கள் 106வது வட்டக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட வட்டக் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 03.08.2026

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

---

### தமிழ்நாட்டில் உர உற்பத்தி மற்றும் விநியோகக்

# கட்டமைப்பை வலுப்படுத்த ஒன்றிய அரசு வகுத்துள்ள திட்டம் என்ன?

## மக்களவையில் – தயாநிதி மாறன் கேள்வி!

புதுடெல்லி, ஆக.4-

புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, நீர் மேலாண்மை மற்றும் அக்ரோகெமிக்கல்ஸ் எனப்படும் வேளாண் வேதிப்பொருட்கள் ஆகிய துறைகளில் RCF நிறுவனம் மேற்கொள்ளவிருக்கும் விரிவாக்க நடவடிக்கைகளின் விவரங்கள் என்ன என்றும், விவசாயிகளுக்கு நியாயமான விலையிலும் சரியான நேரத்திலும் உரங்கள் கிடைப்பதை உறுதி செய்ய வகுத்துள்ள திட்டங்கள் என்ன என்றும் ஒன்றிய இரசாயனம் மற்றும் உரங்கள் துறை அமைச்சர் ஜகத் பிரகாஷ் நத்தா அவர்களிடம் கழக நாடாளுமன்றக் குழுத் துணைத் தலைவரும் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினருமான தயாநிதி மாறன் பல கேள்விகளை எழுப்பியுள்ளார்.



அதன் விவரங்கள் பின்வருமாறு:

'ஃபர்தர் பப்ளிக் ஆஃபரிங் (FPO) எனப்படும் கூடுதல் பொதுப் பங்கு வெளியீடு மூலம் ரூபாய் 1,500 கோடியைத் திரட்டுவதற்கான ராஷ்ட்ரிய கெமிக்கல்ஸ் அண்ட் ஃபெர்டிலைசர்ஸ் லிமிடெட் (RCF) நிறுவனத்தின் முன்மொழிவுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதா? அவ்வாறாயின், அதுகுறித்த விவரங்கள் என்ன? திரட்டப்படும் நிதி எவ்வாறு பயன்படுத்தப்படவுள்ளது?

முன்மொழியப்பட்ட முதலீட்டின் ஒரு பகுதியாவது தமிழ்நாட்டில் உர உற்பத்தி, சேமிப்பு வசதிகள், சரக்குக் கையாளுதல் (Logistics), ஆராய்ச்சி மற்றும் விநியோகக் கட்டமைப்பை வலுப்படுத்துவதற்குப் பயன்படுத்தப்படுமாயின், அது குறித்த விவரங்கள் என்ன?

புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, நீர் மேலாண்மை மற்றும் வேளாண் வேதிப்பொருட்கள் (Agrochemicals) ஆகிய துறைகளில் RCF நிறுவனம் மேற்கொள்ளவிருக்கும் விரிவாக்க நடவடிக்கைகள், விவசாயிகளுக்குக் நியாயமான விலையிலும் சரியான நேரத்திலும் உரங்கள் கிடைப்பதை உறுதி செய்யும் அதன் முக்கிய நோக்கத்தின் மீது எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தும்? அதுகுறித்து ஏதேனும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டிருந்தால் அதன் விவரங்கள் என்ன?

தமிழ்நாட்டில் உர விநியோகச் சங்கிலியின் உறுதித்தன்மையை மேம்படுத்தவும், உரக் கிடைப்புத் தன்மையில் உள்ள பிராந்திய ஏற்றத்தாழ்வுகளைக் குறைக்கவும், உர உற்பத்தி, சேமிப்பு அல்லது சரக்குக் கையாளுதல் வசதிகளை நிறுவ அல்லது விரிவுபடுத்த திட்டமிட்டிருந்தால் அதன் விவரங்கள் என்ன?

இவ்வாறு தயாநிதி மாறன் கேள்வி எழுப்பினார்.

---

### விளாத்திகுளம் தொகுதி கழக சட்டமன்ற உறுப்பினர்

# ஜி.வி.மார்க்கண்டேயனுக்கு ஜாமீன்!

## சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவு

சென்னை, ஆக. 4

முதல்வர் விஜய்க்கு மிரட்டல் விடுத்ததாக கைது செய்யப்பட்ட விளாத்திகுளம் தி.மு.க. எம்.எல்.ஏ. மார்க்கண்டேயனுக்கு நிபந்தனை ஜாமீன் வழங்கி சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தமிழ்நாடு முதல்வர் விஜய்க்கு மிரட்டல் விடுத்ததாகப் பதிவு செய்யப்பட்ட வழக்கில் விளாத் திகுளம் தி.மு.க. எம்.எல்.ஏ. ஜீ.வி.மார்க்கண்டேயனை, தூத்துக்குடி மாவட்ட குற்றப்பிரிவு போலீசார் ஜூலை 20 ஆம் தேதி கைது செய்தனர். தன்னை சிறையிலடைத்து தூத் துக்குடி நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவை எதிர்த்து மார்க்கண்டேயன் தாக்கல் செய்த மனுவை தூத்துக்குடி முதன்மை அமர்வு நீதிமன்றம், தள்ளுபடி செய்தது.



இதைய டுத்து. ஜாமீன் கோரி மார்க்கண்டேயன் தரப்பில் சென்னை உயர்நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த மனு நீதிபதி ஜி.கே. இளந்திரையன் முன் விசாரணைக்கு வந்தபோது, மார்க்கண்டேயன் தரப்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் பி.வில்சன். இதுபோல பேசியிருக்க கூடாது எனக் கூறி தூத்துக்குடி நீதிமன்றம் ஜாமீன் மனுவை தள்ளுபடி செய்துள்ளதாகக் குறிப்பிட்டார்.

இதையடுத்து மார்க் கண்டேயனுக்கு ஜாமீன் வழங்கிய நீதிபதி. 'இது போல் இனிமேல் பேசப் போவதில்லை என தூத் துக்குடி 'நீதிமன்றத்தில் உத்தரவாதம் அளிக்க வேண்டும். சட்டமன்ற கூட்டத்தொடர் நடக்கும் நாட்கள் தவிர மற்ற நாட்களில் இரண்டு வாரங்களுக்கு சம்பந்தப்பட்ட காவல் நிலையத்தில் ஆஜராகி கையெழுத்திட வேண்டும்' என நிபந்தனை விதித்து உத்தரவிட்டுள்ளார்.

---

### ஈரோடு உள்ளிட்ட தொழில் மாவட்டங்களுக்கான சமமான

# பெரு நிறுவன சமூக பொறுப்பு நிதி ஒதுக்கீட்டில் பொறுப்பேற்க ஒன்றிய அரசு மறுப்பு!

## மக்களவையில் ஈரோடு கே.இ.பிரகாஷ் குற்றச்சாட்டு!

புதுடெல்லி, ஆக 4-

தொழில் மாவட்டங்களுக்கான சமமான CSR (பெரு நிறுவன சமூக பொறுப்பு) நிதி ஒதுக்கீட்டில் ஒன்றிய அரசு பொறுப்பேற்க மறுப்பு; ஈரோடு போன்ற மாவட்டங்களின் நியாயமான கோரிக்கைக்கு பதில் இல்லை என ஈரோடு கே.இ.பிரகாஷ் மக்களவையில் குறிப்பிட்டார்.

ஈரோடு மக்களவை உறுப்பினர் கே. இ. பிரகாஷ் அவர்கள், நிறுவனங்கள் சட்டம், 2013-ன் கீழ் அமல்படுத்தப்படும் நிறுவனங்களின் சமூகப் பொறுப்பு (CSR) விதிகள் தொடர்பாக, மாநிலங்கள் மற்றும் தொழில் வளர்ச்சி பெற்ற பகுதிகளுக்கிடையே CSR நிதி சமமாகப் பகிரப்படுகிறதா என்பதையும், குறிப்பாக தமிழ்நாட்டின் ஈரோடு போன்ற இரண்டாம் நிலை தொழில் மையங்களுக்கு வழங்கப்படும் CSR நிதி குறித்து ஒன்றிய அரசு ஆய்வு மேற்கொண்டுள்ளதா என்பதையும் விளக்கம் கோரினார். மேலும், நிறுவனங்கள் சட்ட (திருத்த) மசோதா, 2026 தொடர்பாக தொழில் அமைப்புகள், சமூக அமைப்புகள் மற்றும் பிற பங்குதாரர்களிடமிருந்து பெறப்பட்ட கருத்துகள் என்ன, தற்போதைய நிறுவன ஆளுமைச் சட்ட அமைப்பின் கீழ் CSR செயல்பாட்டை மேலும் வலுப்படுத்தவும், வெளிப்படைத்தன்மை மற்றும் கண்காணிப்பு நடைமுறைகளை மேம்படுத்தவும் ஒன்றிய அரசு திட்டமிட்டுள்ளதா என்பதையும் கேட்டறிந்தார். அரசு



நிறுவன விவகாரங்கள் அமைச்சகம் அளித்த பதில் பின்வருமாறு

(அ): இல்லை. நிறுவனங்கள் சட்டம், 2013-ன் கீழ் செயல்படும் CSR அமைப்பு முழுமையாக வெளிப்படுத்தல் (Disclosure) அடிப்படையிலானது என்றும், CSR நடைமுறைப்படுத்த வேண்டிய நிறுவனங்கள் தங்களது CSR நடவடிக்கைகளின் விவரங்களை ஆண்டுதோறும் MCA21 பதிவேட்டில் சமர்ப்பிக்க வேண்டும் என்றும் அமைச்சகம் தெரிவித்துள்ளது.

CSR என்பது நிறுவனத்தின் இயக்குநர் குழு (Board) வழிநடத்தும் செயல்முறையாகும். நிறுவனத்தின் CSR குழுவின் பரிந்துரையின் அடிப்படையில், நிறுவனங்கள் சட்டத்தின் அட்டவணை VII-ல் குறிப்பிடப்பட்டுள்ள திட்டங்கள் மற்றும் துறைகளில் CSR நடவடிக்கைகளைத் திட்டமிடுதல், முடிவு செய்தல், செயல்படுத்தல் மற்றும் கண்காணித்தல் ஆகிய அதிகாரங்கள் இயக்குநர் குழுவிற்கு வழங்கப்பட்டுள்ளன.

நிறுவனங்கள் சட்டத்தின் பிரிவு 135(5)-இன் முதல் விதிவிலக்கின்படி, நிறுவனங்கள் தாங்கள் செயல்படும் உள்ளூர் பகுதிகளுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருந்தாலும், அது கட்டாய விதியாக அல்ல; வழிகாட்டும் தன்மை கொண்டதாக மட்டுமே இருப்பதாக அமைச்சகம் தெரிவித்துள்ளது. மேலும், உள்ளூர் பகுதிகளுக்கான முன்னுரிமையையும் தேசிய முன்னுரிமைகளையும் நிறுவனங்கள் சமநிலைப் படுத்த வேண்டும் என்றும் கூறியுள்ளது.

எனவே, குறிப்பிட்ட பகுதி அல்லது குறிப்பிட்ட செயல்பாட்டிற்காக CSR நிதியை செலவிடுமாறு நிறுவனங்களுக்கு ஒன்றிய அரசு எந்தவித உத்தரவும் வழங்குவதில்லை. இதன் காரணமாக, ஈரோடு போன்ற மாவட்டங்களில் CSR நிதி பகிர்வு குறித்து தனிப்பட்ட ஆய்வு எதுவும் மேற்கொள்ளப்படவில்லை என்றும் அமைச்சகம் தெரிவித்துள்ளது.

(ஆ): நிறுவனங்கள் சட்ட (திருத்த) மசோதா, 2026 நாடாளுமன்றத்தில் அறிமுகப்படுத்தப்பட்டு கூட்டு நாடாளுமன்றக் குழுவிற்கு (Joint Parliamentary Committee JPC) அனுப்பப்பட்டுள்ளது. இந்த மசோதா தொடர்பாக பல்வேறு பங்குதாரர்களிடமிருந்து பெறப்பட்டுள்ள கருத்துகள் மற்றும் பிரதிநிதித்துவங்கள் தற்போது அந்தக் குழுவின் பரிசீலனையில் உள்ளதாக அமைச்சகம் தெரிவித்துள்ளது.

(இ): தற்போதைய CSR சட்ட அமைப்பிலேயே வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புணர்வை உறுதி செய்ய போதுமான சட்ட ஏற்பாடுகள் உள்ளன என்று அமைச்சகம் தெரிவித்துள்ளது. CSR நடைமுறைப்படுத்தும் நிறுவனங்கள் ஆண்டுதோறும் MCA21 பதிவேட்டில் CSR நடவடிக்கைகளின் விவரங்களை தாக்கல் செய்ய வேண்டும். மேலும், நிறுவனத்தின் CSR கொள்கையை இயக்குநர் குழு அறிக்கையில் வெளியிட வேண்டும். ஒப்புதல் அளிக்கப்பட்ட CSR நிதி குறிப்பிட்ட நடவடிக்கைகளுக்காக முழுமையாக செலவிடப்பட்டுள்ளதா என்பதை உறுதி செய்வதும் இயக்குநர் குழுவின் பொறுப்பாகும்.

மேலும், CSR குழு அமைத்தல், CSR கொள்கை உருவாக்குதல், ஆண்டு செயல் திட்டம் தயாரித்தல், திட்டங்கள் மற்றும் செயல்படுத்தும் பகுதிகளைத் தேர்வு செய்தல், CSR செலவினங்களை தலைமை நிதி அதிகாரி (CFO) சான்றளித்தல் மற்றும் சட்டப்பூர்வ தணிக்கையர்களால் (Statutory Auditors) தணிக்கை செய்தல் போன்ற தற்போதைய சட்ட ஏற்பாடுகள் போதுமான கண்காணிப்பு மற்றும் வெளிப்படைத்தன்மையை உறுதி செய்கின்றன என்றும், இதற்கும் மேலாக புதிய கண்காணிப்பு அல்லது வெளிப்படைத்தன்மை நடைமுறைகளை கொண்டு வருவதற்கான எந்தவொரு புதிய முன்மொழிவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்றும் அமைச்சகம் தெரிவித்துள்ளது.